பொதுநிருவாகச் சுற்றறிக்கை இல. 1/96(1)

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில்,
பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு,
கொழும்பு - 07.
1996 ஜூன் மாதம் 21 ஆந் திகதி

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,

திணைக்களத் தலைவர்களுக்கும்,

## சிறாப்பர் சேவையின் புதிய அமைப்பை நடைமுறைப்படுத்தல்

1996.01.11 ஆந் தேதிய 1/96 ஆம் இலக்க 1975.11.10 ஆந் தேதிய 101 ஆம் இலக்க பொதுநிருவாகச் சுற்றறிக்கை மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. 1975-04-01 ஆந் திகதி தொடக்கம் மறுசீரமைக்கப்பட்ட சிறாப்பர் சேவை நியமனங்கள் வேதனவேற்ற நலன்கள் மட்டும் பெறக்கூடிய வகையில் 1996.01.11 ஆந் தேதிய 1/96 ஆம் இலக்க பொதுநிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் 1971.10.01 ஆந் தேதிக்கு முற்றேதியிடுவதற்காக தகுதியுடைய உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களை தாம் பணியாற்றும் திணைக்களத் தலைவர்/அமைச்சின் செயலாளர் ஊடாக இதன் மறுபக்கத்திலுள்ள படிவத்தின்படி தயாரித்து இணைந்த சேவைகள் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். தற்போதைக்கு அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ள உத்தியோகத்தர்களினது மாகாண அரச சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களினதும் விண்ணப்பங்கள் அவர் இறுதியாகக் கடைமையாற்றிய திணைக்களத் தலைவர்/அமைச்சின் செயலாளர் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

03. சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள்/அமைச்சுக்களின் செயலாளர்கள், குறித்த உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களில் குறிப்பிட்டிருக்கும் விபரங்களை அவர்களின் பெயவழிக்கோவையுடன் ஒப்பிட்டுப்பார்த்து படிவத்தின் 11 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள உறுதியுரையை பூர்த்திசெய்து சமர்ப்பிக்க வேண்டும். உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்து, அல்லது அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்குமிடத்து அவர் தொடர்பில் இரகசிய அறிக்கையொன்றையும் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

04. இந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள விடயங்களை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் கவனத்திற்கு கொண்டுவருமாறு திணைக்களத் தலைவர்கள் அமைச்சுக்களின் செயலாளர்கள் யாவரும் வேண்டப்படுகின்றனர்

(ஆர். எஸ். ஜயரத்ன)
செயலாளர்
பொதுநிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில்
பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

கி/தே. 5

.......................... ஊடாக

இணைந்த சேவைகள் பணிப்பாளர்

1975.04.01 ஆந் திகதி தொடக்கம் மறுசீரமைக்கப்பட்ட சிறாப்பர் சேவை நியமனங்களை, வேதனவேற்ற நலன்களை மற்றும் பெறக்கூடிய வகையில் 1971.10.01 ஆந் திகதிக்கு முற்றேதியிடல்

பகுதி 1 (உத்தியோகத்தரால் பூர்த்தி செய்யப்பட வேண்டும்)

01. பெயர் :-

1.1 உத்தியோகத்தரின் முழுப்பெயர் (முதலெழுத்துக்களுடன்) :-

1.2 முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்கள் :-

02. பிறந்த திகதியும் 1971.10.01 ஆந் திகதியில் வயதும் :-

03. சேவை நிலையம் :-

3.1 தற்போது சேவையாற்றும் இடம் :-

3.2 1975.04.01 திகதி சேவையாற்றிய இடம் :-

3.3 1971.10.01 ஆந் திகதி சேவையாற்றிய இடம் :- (அமைச்சு, திணைக்களத்துடன் கிளை அலுவலகத்தின் பெயரையும் குறிப்பிடவும்)

04. நியமனம் மற்றும் பதவியுயர்வு தொடர்பான விபரம் :-

4.1 தரம் 111க்கு நியமிக்கப்பட்ட திகதி :- (1975 சிறாப்பர் சேவை உருவாக முன்)

4.2 சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :-

4.3 பிரிவு 11 'ஆ' வுக்கு உள்ளீர்க்கப்பட்ட திகதி :-

4.4 பிரிவு 11 'அ' வுக்கு உள்ளீர்க்கப்பட்ட திகதி :-

4.5 வகுப்பு 1 க்கு உள்ளீர்க்கப்பட்ட திகதி :-

4.6 தற்போது வகிக்கும் பதவி, வகுப்பு, அல்லது தரம் :-

4.7 தற்போது வகிக்கும் பதவி வகுப்பு/பிரிவுக்கு நியமிக்கப்பட்ட திகதி :-

4.8 மாகாண அரச சேவைக்கு விடுவிக்கப்பட்டிருப்பின் அவ்வாறு விடுவித்த திகதி :-

4.9 ஓய்வுபெற்றிருந்தால் ஓய்வு பெற்ற திகதி :-

05. 1971.10.01 ஆந் திகதி தொடக்கம் பெற்றுள்ள பகுதிச் சம்பளத்துடனான/ சம்பளமற்ற விடுமுறை விபரங்கள் :-

06. 1971.10.01 ஆந் திகதிக்கு முற்பட்ட ஐந்துவருட காலத்தில் ஏதேனும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் அதுபற்றிய விபரம் :-

6.1 வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த காலம் :-

6.2 மீண்டும் சேவைக்கு அமர்த்தப்பட்ட திகதி :-

6.3 விதிக்கப்பட்ட தண்டனை :-

07. வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளில் சித்தியடைந்த திகதி/அல்லது அந்தப் பரீட்சைகளில் சித்தியடைய வேண்டுமென்ற தேவையிலிருந்து விடுவிக்கப்பட்ட திகதிகள் :-

......60

1/96(1)

08. எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டியவரையில் மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை யென்றும், உண்மையானவை யென்றும் சான்றுப்படுத்துகிறேன். என்னால் தரப்பட்டுள்ள விபரங்களோ அல்லது அதன் ஒரு பகுதியோ பொய்யானவையென அல்லது பிழையானவையென வெளிப்படுமாயின் எனக்கு வழங்கவிருக்கும் உள்ளீர்ப்புக் கடிதம்/பதவி உயர்வுக் கடிதம் இரத்துச் செய்யப்படுமென்பதையும் எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள முடியுமென்பதையும் அறிவேன்.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
விண்ணப்பதாரரின் கையொப்பம்

<u>பகுதி 11.</u>

09. அமைச்சின் செயலாளரினதும் திணைக்களத் தலைவரினதும் உறுதியுரை :-

அ. 1. திரு/திருமதி/செல்வி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
மேலே/மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் அவரின் பெயர்வழிக் கோவையிலுள்ள மூலப்பிரதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டதென்றும், அவையாவும் சரியானவை யென்றும் . . . . . . . . . . . . . . . . . . கூடுகளில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் சரியானவை யென்றும்,

அ. 2. அவரின் வேலை வரவு, நடத்தை, திருப்திகரமானதென்றும்,

அ. 3. அவர் 1971.10.01 ஆந் திகதிக்கு முற்பட்ட ஐந்துவருடக் காலகட்டத்தில் கிடைக்கப்பெற வேண்டியிருந்த வேதனவேற்றங்கள் அனைத்தையும் உழைத்துப் பெற்றுள்ளார் என்றும், இறுதியான வேதனவேற்றத்தின்பின் அபராதமொன்றுக்கு அல்லது கண்டிப்புக்கு மேற்பட்ட ஒரு தண்டனைக்கு ஆளாகவில்லையென்றும்;

அ. 4. 1996.01.11 ஆந் தேதிய 1/96 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் கீழான வேதனவேற்ற நலன்களை மற்றும் பெறக்கூடியவ 1975.04.01 ஆந் திகதி முதல் மறுசீரமைக்கப்பட்ட சிறாப்பர் சேவையின் . . . . . . . . . . . . . . . . வகுப்புக்கு, பிரிவுக்கு உள்ளீர்ப்பதற்கு, 1971.10.01 ஆந் திகதி தொடக்கம் முற்றேற்பிப்பதற்கு சகல அம்சங்களிலும் தகைமையுடையவர் என்பதை நான் சிபார்சு செய்கிறே

அ. 5. உத்தியோகத்தருக்கு எதிராக நடைபெறும் ஒழுக்காற்று விசாரணை/நடாத்த உத்தேசித்துள்ள ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான ஒரு இரகசிய அறிக்கை இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
அமைச்சின் செயலாளர்/திணைக்களத் தல

திகதி:-

(அமைச்சின் செயலாளர்/திணைக்களத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள பிரதித் தலைவரால் இது தனிப்பட்ட முறையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

கி/தே/5.